செய்யக்கூடிய நல்ல வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலே, அந்த ஊரகத் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் அங்கு தொழிற்சாலை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ஊரகப் பகுதிகளில் புதிய தொழிற்சாலை உருவாவதற்கு வேண்டிய வழிமுறைகளை வகுத்துத் தந்து, அதன்மூலம் ஊரகப் பகுதிகளில் தொழிலைப் பெருக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த முயற்சியை, ஏற்காடு பகுதியிலே இருக்கக்கூடிய காபி வியாபாரிகள், இந்தப் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் செய்ய முன்வருவார்களேயானால் அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *10*, திரு. ப. அரசன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

10—

சோப்பு தொழிற்சாலை

***46100—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி நகரில் கதர் வாரியம்மூலம் சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

முற்பகல் 10-50

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்வார்கள், “வேலையற்றோர் நெஞ்சிலே விபரீத எண்ணங்கள்” என்று. ஒரு அரசு வேலைவாய்ப்பை உருவாக்குவது என்பது மிக முக்கியமான கடமைகளிலே ஒன்றாகும். அந்த வகையில், வேலைவாய்ப்பை மணமேல்குடி பகுதியிலே

2006 ஜனவரி 17]

உருவாக்குகிற வகையில், மிகக் குறைந்த செலவிலே சோப்பு தொழிற்சாலையை உருவாக்கிட முடியும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி நகரில் கதர் வாரியத்தின்மூலமாக சோப்பு தொழிற்சாலை தொடங்குவதற்கு ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் வாரியத்தின்மூலம் தற்போது 24 சோப்பு உற்பத்தி அலகுகள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மணமேல்குடி நகரின் அருகில் உள்ள கண்டனூர் என்கிற இடத்தில் வாரியத்தின் சார்பிலேயே சோப்பு அலகின்மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது. அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களின் தேவைகளை அறிந்துதான் சோப்பு உற்பத்தி செய்யப்படுகிறது கண்டனூரில். அதுமட்டுமல்ல, புதுக்கோட்டை மாவட்டத்திற்கு அருகிலேயே திருச்சி மாவட்டம், சமயபுரத்திலே இருக்கிறது, நாஞ்சிக்கோட்டையிலே இருக்கிறது. ஆக, தேவைகளை வைத்துத்தான் சோப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. தேவை அதிகமாக இருக்கிறபோது, மணமேல்குடி அருகிலே இருக்கிற கண்டனூரிலேயே உற்பத்தி செய்ய வாய்ப்பு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 11, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

11—

நில ஆர்ஜிதம்

***50040—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலை வட்டம், கரட்டூர் ஊராட்சி, ஆதி திராவிட மக்களுக்கு இலவச மனைப் பட்டா வழங்குவதற்கு நிலம் ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன். கோயம்புத்தூர்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS